**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**நாள்.27.03.2025**

**O.S.No.156 / 2022**

**வா.சா.1 கணேஷ்**

**குறுக்குவிசாரணை**

1) இந்த வழக்கு தாக்கல் செய்ய எங்கள் வழக்கறிஞருக்கு விவரங்கள் நான்தான் சொல்லி கொடுத்தேன். என் மனைவி மீனாலெட்சுமி விவரம் சொல்லி கொடுக்கவில்லை என்றால் ஆம். வாதி பிராதில் எங்கள் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து பிராதை படித்து பார்த்து கையொப்பம் செய்தார். நான் சொத்தை விலை வாங்கியது என் மனைவி பெயரில் வாங்கினேன். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் நான் பணம் கொடுத்ததாக துலங்காது என்றால் சரிதான். அவ்வாறு பத்திரத்தில் எழுதாததால் இந்த வழக்கிற்காக வா.சா.ஆ.2 விலை ஆதாரத்தின் விலை தொகை நான் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்கு ஐந்து பிள்ளைகள். 1. காந்திமதி, 2.ஆறுமுகம், 3.முருகேசன், 4.சித்ரா, 5.ஹரிஹரன்.

2) வாதி பெயரில் விலை வாங்கியது யாரிடம் இருந்து என்றால் காந்திமதி, முருகேசன் மனைவி கற்பகம் மற்றும் ஆறுமுகம். முருகேசன் மனநிலை பாதிக்கப்பட்ட நிரந்தர மனநிலை நோயாளி என்றால் சரிதான். கற்பகம் முருகேசனின் பாதுகாவலர் (Curator) என்ற அதிகாரித்தில் கிரைய ஆவணம் எழுதலாம் என எந்த நீதிமன்றத்திலும் அனுமதி பெறவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. கற்பகத்திற்கு முருகேசன் ஜீவிதகாலத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல உரிமை உள்ளது. கற்பகத்திற்கு உரிமை உள்ளதாக நான் எந்த ஆவணத்தை பார்வையிட்டேன் என்றால் ஆவணம் பார்க்கவில்லை கற்பகம் முருகேசன் மனைவி என்பதால் அவர் ஆவணம் எழுதி தரலாம் என ஆவண எழுத்தர் தெரிவித்தார்.

3) முருகேசன் ஜீவித காலத்தில் கற்பகம் மாவட்ட நீதிமன்றத்தில் உரிய மனு செய்து அனுமதி பெற்ற பின் மட்டும்தான் முருகேசன் சொத்து குறித்து ஆவணம் எழுதிக்கொடுக்க முடியும் என்றாலும் அவ்வாறு அல்லாமல் ஆவணம் எழுதிக்கொடுப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் எனக்கு தெரியாது.

மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு நான் எந்த தாய் பத்திரமும் பார்க்கவில்லை என்றால் நான் பார்த்துள்ளேன் தாய் பத்திரம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மீனாட்சி சுந்தரம்பிள்ளை பெயரில் பத்திரம் கிடையாது. பட்டா மட்டும் உண்டு. பிரதிவாதி சுவாமிநாதன் என் அப்பா பகவதியின் இளைய சகோதரர் என் சித்தப்பா ஆவார். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை பிரதிவாதிக்கு சித்ரா மற்றும் ஹரிஹரன் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.1 எழுதிக்கொடுத்த தேதி முதல் வழக்குச்சொத்து 1 ¼ செண்ட் பிரதிவாதி கைவச அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவண விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 நகல் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பட்டாவை தவிர மீனாட்சி சுந்தரம்பிள்ளை பெயரில் வேறு எந்த ஆவணமும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் விற்பனையாளரிடம் இருந்து விலை வாங்க அந்த விற்பனையாளர்களுக்கு சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். என் நிரூபண வாக்குமூலத்தில் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பெயரில் மற்ற இதர ஆவணங்கள் இருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சியானது ஒத்திவைக்கப்படுகிறது.